www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

18 DECEMBER 2022 - SUNDAY

Pages - 10

E Paper - # 020 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK

E-mail: editor@newsplus.lk

## ஊடக சமூகத்திலும் முஸ்லிம்கள் புறக்கணிப்பு

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை பத்திரிகை நிறுவனத்துடன் 02 »»




## யாருக்கு மகுடம் தீர்க்கமான போட்டி இன்று

**வெற்றி அணிக்கு 342 கோடி**

இறுதிப்போட்டியில் அர்ஜென்டினா, பிரான்ஸ் அணிகள் இன்று மோதல்.

தோகா: 22-வது உலக கோப்பை கால்பந்து போட்டி அரபு 02 »»



## வேட்புமனு தாக்கலின் பின்

# ஆறு மாதத்திற்கு தேர்தல் ஒத்திவைப்பு

**அரசு மட்டத்தில் தீவிர ஆராய்வு!**

எதிர்வரும் மார்ச் மாதம் நடாத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நியமன பத்திரங்களைக் கோரி சுமார் ஆறு மாத காலத்திற்கு தேர்தலை ஒத்திப் போடுவதற்கு அரச உயர் மட்டத்தில் ஆராயப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளன.

தேர்தல் ஆணைக்குழு இம்மாத இறுதியில் தேர்தல் நடாத்துவது பற்றி அறிவித்து நியமனப் பத்திரங்களைக் கோரிய பின் தேர்தலை குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்காவது ஒத்திப்போடுவது குறித்து அரசு தரப்பட்டு ஆராய்ந்து 02 »»

## நிர்க்கதியாகியுள்ள எமக்கு நீதியை நிலைநாட்டுங்கள்

**கொள்ளுப்பிட்டி விபத்தில் பலியானவரின் மனைவி உருக்கம்**



நிர்க்கதியாகியுள்ள எமக்கு நீதியை நிலைநாட்டுங்கள். மூன்று பிள்ளைகளுடன் நான் நிர்க்கதியாகியுள்ளேன். 02 »»

## புது வருடத்தில் 26 ஆயிரம் ஆசிரியர் நியமனங்கள்

தற்போது அரசாங்கப் பாடசாலைகளில் பணிபுரியும் முகாமைத்துவ உதவியாளர்களே இவ்வாறு ஆசிரியர்களாக 02 »»

## வேலுகுமார் மீதான தடை நீக்கம் மனோ கணேஷன் அறிவிப்பு



தமிழ் முற்போக்குக் கூட்டணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் மீண்டும் கூட்டணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார். 02 »»

## இலக்கு வைக்கப்படும் முஸ்லிம் வைத்தியர்கள்

**ஷாபிக்கு அடுத்து ரிஸ்வி ஷரீப்**



**(அப்ரா அன்சார்)**

கால காலமாக பல அரசியல் மற்றும் பலரின் தனிப்பட்ட இலாபங்களுக்காகவும், இனவாத நோக்கங்களுக்காகவும் வைத்தியத்துறை பகடைக்காயாக அமைந்திருப்பது ஒவ்வொரு இலங்கை மக்களும் 02 »»

## சஜித்தும் ராஜிதவும் இரகசியப் பேச்சு

**ரணில் அரசில் இணையமாட்டார்**



முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அரசாங்கத்தில் இணையப் போவதாக பரவிவந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் கடந்த 10ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், ராஜித சேனாரத்ன உட்பட ஐக்கிய 02 »»

## மொட்டுவின் தொப்பி ரணிலுக்கு அணிவிப்பு

**அவர்கள் இப்போது இரண்டல்ல ஒன்று**




மொட்டு ஒன்று சேர்ந்து ஜனாதிபதிக்கு கிண்ணம் வழங்கி மொட்டு தொப்பி அணிந்துள்ளதாகவும், அவர்கள் இருவரும் இப்போது இரு தரப்பல்ல ஒரே தரப்பெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டம் பிங்கிரிய தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று 02 »»



கம்போடியாவின் உயர்மட்டத் தூதுக் குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக இலங்கைத் தலைவர்களுடன் கலந்துரையாடினர். கம்போடிய அரசின் விசேட விவாகரங்களுக்கான அமைச்சர் கலாநிதி ஒஸ்த்மான் ஹஸன் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்த போது எடுக்கப்பட்ட படம். கம்போடிய பாராளுமன்ற உறுப்பினர் ரெபி ஒத்ஸ்மான், உதவி ராஜாங்க செயலாளர் லோன் ராக் ஆகியோரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## வேட்புமனு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வருகின்றது.

அடுத்த மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு மத்தியில் தேர்தலை நடாத்துவது பாதிப்பாக அமையலாம் என அரச தரப்பு முக்கியஸ்தர்களின் கருத்தாக இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேநேரம் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் இயங்கும் தேர்தல் எல்லை நிர்ணய ஆணைக்குழு குழுவின் அறிக்கை பூரணப்படுத்தப்பட்ட பின் எட்டாயிரம் வட்டாரங்கள் நாலாயிரத்து ஐநூறு வட்டாரங்களாக குறைத்து தேர்தல்களை நடாத்துவதற்கும் அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

இதன் மூலம் பெருந்தொகையான பணத்தை மீதப்படுத்தலாம் என அரசு கருதுகிறது.

தற்போதுள்ள தேர்தல் சட்டப்படி தேர்தல் ஆணைக் குழுவுக்கு தேர்தலை ஒத்திப் போடுவதற்கு சட்டத்தினால் ஏற்பாடு இல்லை. எனினும் தேர்தல் நியமனப் பத்திரங்களை கோருவது தவிர்க்க முடியாதுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேநேரம் எதிர்வரும் 19 திகதி தேர்தல் ஆணைக்குழு கூடி நியமனப்பத்திரம் கோருவது தொடர்பில் தீர்மானங்களை எடுக்கவுள்ளது.

தேர்தல் எல்லை நிர்ணய ஆணைக்குழு 8000 வட்டாரங்களை 5500 ஆகக் குறைத்து சிபாரிசுகளைச் செய்யவுள்ளது. சிபாரிசுகளைச் செய்தாலும் புதிய வட்டாரப்படி தேர்தலை நடாத்துவதற்கு ஆறு மாதங்கள் எடுக்கும். ஏனெனில், தேர்தல் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் சிபாரிசுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என தேர்தல் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய நியூஸ் ப்ளஸ்"க்குத் தெரிவித்தார்.

## புது வருடத்தில்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்.

போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு இந்த ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் குறித்த மாவட்டத்தில் எட்டு வருடங்கள் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும் என்று பணிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், தொழில்நுட்பப் பாடங்களுக்கே புதிதாக பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

40 வயதுக்கு உட்பட்டோர்களுக்கே இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## சஜித்தும்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள் பலரும் விருந்தொன்றில் கலந்து கொண்ட போது சஜித்தும், ராஜிதவும் ஒரு மணி நேரமாக சந்தித்து கலந்துரையாடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் தேசிய அரச மருந்தாங்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த கலாநிதி ரூமியின் வீட்டிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. கலாநிதி ரூமியின் பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பை அடுத்து ராஜித சேனாரத்ன ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவது இடம்பெறாதென ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ராஜித அரசில் இணைந்தால் சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்படுமென்று கூறப்பட்டபோதும், மொட்டுக் கட்சிக்குள் உருவாகியுள்ள எதிர்ப்பை அடுத்தே அத்தீர்மானம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## நிர்க்கதியாகியுள்ள...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

எந்தவித வருமானமும் அற்ற எனது குடும்பத்துக்கு அனுதாபம் காட்டுங்கள் என கொள்ளுப்பிட்டியில் வாகன விபத்தில் உயிரிழந்த நூர்தீன் துவானின் மனைவி கண்ணீர் மல்க தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற சொகுசு கார் ஆட்டோவுடன் மோதியதில் கஹத்துடுவ பிரகீத் மாவத்தையில் வசித்த 58 வயதுடைய நூர்தீன் துவான் என்பவர் உயிரிழந்தார்.

கோடீஸ்வர வர்த்தகரான 26 வயதுடைய மொஹமட் ரிஸ்வான் இந்த சொகுசு காரை ஓட்டிச் சென்றுள்ளார். வாகனத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் முன்னே சென்று கொண்டிருந்த ஆட்டோ மீது மோதி அருகிலுள்ள வீடொன்றின் கேட்டையும் உடைத்து நின்றது.

குறித்த நபர் அன்றிரவே டுபாய் சென்றிருந்த நிலையில் திரும்பி வருகையில் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த விபத்தினால் நானும் பாடசாலை செல்லும் மூன்று பிள்ளைகளும் நிர்க்கதியாகியுள்ளோம். எனவே குறித்த நபர் மூலம் எனக்கு நீதி நியாயத்தை பெற்றுத் தாருங்கள் என்று உயிரிழந்தவரின் மனைவி கேட்டுக் கொண்டார்.

## வேலுகுமார்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

"அவர் மீதான இடைக்காலத் தடை மீளப்பெறப்பட்டுள்ளது" என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் உயர்பீடம் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் கூடிய போது, இவ்விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு, சிவில் சமூகத்தினரின் கோரிக்கை பரீசிலிக்கப்பட்டு இம்முடிவு எடுக்கப்பட்டது.

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதன்போது பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்ற முடிவை தமிழ் முற்போக்குக் கூட்டணி எடுத்திருந்தது. எனினும், கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் நடுநிலை வகித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் தந்திரத்தில் இருந்து விடுபட்டு மக்கள் வழிக்குத் திரும்ப வேண்டும் என்பதாலேயே இவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்டது என வேலுகுமார் அறிவித்தார்.

வாக்கெடுப்பின்போது கூட்டணியின் முடிவுக்கு இணங்கிச் செயற்படாததால், வேலுகுமாரைக் கூட்டணியில் இருந்து இடைநிறுத்தும் அறிவிப்பை தலைவர் மனோ கணேசன் விடுத்திருந்தார்.

இந்த முடிவுக்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டிக் கிளை கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. "நடுநிலை" என்பது அரசுக்கான ஆதரவு அல்ல என்பதால் வேலுகுமார் மீதான தடைநீக்கப்பட வேண்டும் எனவும் தலைமைப்பீடத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அத்துடன், சிவில் சமூகப பிரதிநிதிகள் சிலரும் இந்த விவகாரம் தொடர்பில் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கினர். இந்நிலையிலேயே வேலுகுமார் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

## இலக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அறிந்த விடயமே. வைத்தியர் ஷாபிக்கு அரங்கேற்றிய நாடகங்கள் அனைத்தும் களைந்தெறியப்பட்டு விட்டன.அது முடிவடைந்தே பெரிதளவான காலம் இன்னும் தாண்டவில்லை.அதற்குள் வைத்தியர் ரிஸ்வி சரீபின் சிறுநீரகம் மற்று சத்திர சிகிச்சை சம்பந்தமான தலைப்பு நாடக மேடையில் இனவாதிகளால் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இது குறித்து வைத்தியர் ரிஸ்வி சரீப் பேசுகையில்,

சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை இலங்கை நாட்டில் அறிமுகப்படுத்தியவர் நான். முதன் முதலாக 1986 லீடர்ஸ் திரிமான என்பவருக்கு அவரின் தந்தை, சார்ல்ஸ் திரிமானவின் சிறுநீரகத்தை மாற்றி சிறுநீரகம் மற்று சத்திர சிகிச்சையை மேற்கொண்டோம். அந்த ஆரம்பம் முதல் சுமார் 1350 க்கும் மேற்பட்ட சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகளை பிரதான வைத்தியசாலையில் மேற்கொண்டுள்ளேன். மேலும் 100000 மேற்பட்ட மாணவர்களுக்கு கற்பித்துள்ளேன். மேலும், 50ற்கும் மேற்பட்ட சிரேஷ்ட வைத்தியர்கள் மற்றும் 20 தொடக்கம் 30 வரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் வைத்தியர்களை உருவாக்கியுள்ளேன். சாதரணமாக ஒரு சிறுநீரக நோயாளிக்கு இரத்த மாற்று சிகிச்சை அவருக்கு ஓரளவு பயனளிக்கும். இருப்பினும் ஒரு முறை இரத்த மாற்றத்திற்கு தனியார் வைத்தியசாலை ஒன்றில் 10000 வரை செலவாகும். ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மூன்று முறை ஒருவர் இதனை செய்ய வேண்டும். இருப்பினும் சிறுநீரக மற்று சத்திர சிகிச்சை அதனை விட பலனளிக்ககூடியதாகவும் இலகுவானதும் என நாங்கள் அறிமுகப்படுத்தினோம்.

அது மற்றுமன்றி சிறுநீரகம் சம்பந்தமான எந்த வித சட்டங்களும் இலங்கை நாட்டில் இருக்கவில்லை. 1987ல் எனது பூரண ஒத்துழைப்புடன் சட்டங்களை நிறுவினோம். அந்த சட்டத்தில் கண் மாற்று சிகிச்சை இரத்த மற்று சிகிச்சை எல்லாம் சம்பந்தான சட்டங்களும் இருக்கிறது. இருப்பினும் சட்டங்கள் மேலும் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

இது மட்டுமில்லாமல் வெஸ்டர்ன் வைத்தியசாலை என்று ஒன்றை நிறுவி அதிலும் நான் 1350க்கும் மேற்பட்ட மற்று சிகிச்சைகளை செய்திருக்கிறேன் இருப்பினும் பலர் எனக்கு பல கட்டுக்கதைகளையும் ,பொய்பிரச்சாரங்களையும் பரப்புகின்றனர்.இதற்கு பிராதன காரணமாக நான் நினைப்பது நான் ஒரு முஸ்லிம் ஆக இருப்பது தான்.

இது மட்டுமன்றி தீவிரவாதி சஹ்ரானின் சகோதரரு நாங்கள் அடைக்கலம் கொடுத்து கண் அறுவை சிகிச்சைக்காக வைத்திருந்தோம் எனவும் எமக்கு கட்டுக்கதைகள் இட்டுக்கட்டப்பட்டன. பின்னர் சஹ்ரானின் மனைவியின் வாக்குமூலத்துடன் அவை பொய் என நிரூபமானது.

இப்படி பிரச்சினைகளுக்கு பிரதான காரணம், ஒரு சிறுநீரக சத்திரசிகிச்சையில் எமது பங்களிப்பு இரசாயன ரீதியானது. அதாவது சத்திர சிகிச்சை செய்வது போன்றது. இருப்பினும் இவ்வாறன பிரச்சினைகளுக்கு நடுவில் இருக்கும் தரகர்களின் மூலமாகவே பிரச்சினைகள் ஏற்படுகிறது. ஒரு சத்திர சிகிச்சைக்கு மேற்கொள்ளும் போது சுகாதார அமைச்சின் அனுமதியுடனே நடைப்பெருகிறது என வைத்தியர் ரிஸ்வி சரீப் தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியை அடுத்த வார கட்டுரையில் எதிர்பாருங்கள்.

## மொட்டுவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

(17) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாட்டுப் பிரதானியும் பாராளுமன்ற உறுப்பினருமான நளின் பண்டார அவர்கள் இதனை ஏற்பாடு செய்திருந்ததோடு,ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர்.

மொட்டுவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தற்போதுள்ள ஆட்டம் கிடைத்த அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கான ஆட்டமே என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஆட்சியதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள இருதரப்பும் ஒன்றிணைய முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தண்ணீருக்குப் பயந்து பைத்தியக்கார நாய்களைக் குளிப்பாட்ட முடியாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதேபோன்றே,தேர்தல்களுக்கு பயந்த அரசாங்கத்தை தேர்தலுக்கு அழைத்துச் செல்ல முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கத்திற்கு தெரிந்த,கூறும் அனைத்து சதிகளையும் அரசாங்கம் செய்து கொண்டிருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,ஏற்றுக் கொள்ளத்தக்க காரணம் ஏதும் இல்லாவிட்டால் காலநிலை காரணத்தைக் கூட கூறி தேர்தலை ஒத்திவைப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

போலிக் கூட்டணியில் சேர்ந்து நாட்டை சீரழிப்பதற்குப் பதிலாக,தூய அணியுடன் இணைந்து இலங்கை 1ஆவ நிலைக்கு ஸ்தானப்படுத்த அழைப்பு விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## யாருக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

நாடான கத்தாரில் கடந்த மாதம் 20-ம் தேதி கோலாகலமாக தொடங்கியது.

32 நாடுகள் பங்கேற்ற இந்த கால்பந்து திருவிழாவில் 4 முறை சாம்பியனான ஜெர்மனி முதல் சுற்றுடன் நடையைக் கட்டியது. எதிர்பார்க்கப்பட்ட நம்பர் ஒன் அணியும், 5 முறை சாம்பியனுமான பிரேசில் கால்இறுதியில் குரோஷியாவிடம் மண்ணை கவ்வியது.

லீக் சுற்றுகள், நாக் அவுட் சுற்றுகளின் முடிவில் நடப்பு சாம்பியன் பிரான்சும், முன்னாள் சாம்பியன் அர்ஜென்டினாவும் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

இந்நிலையில், உலக கோப்பை மகுடம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இறுதி ஆட்டத்தில் பிரான்சும், அர்ஜென்டினாவும் இன்றிரவு லுசைல் ஐகானிக் ஸ்டேடியத்தில் மோத உள்ளன.

உலகம் முழுவதும் கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கும் இந்த இறுதிப்போட்டியில் யார் வெற்றி பெற்றாலும் அது அவர்கள் வெல்லும் 3-வது உலகக் கோப்பையாக அமையும். மெஸ்சியின் கடைசி உலக கோப்பை போட்டி இது என்பதால் கோப்பையை கையில் ஏந்துவாரா என அர்ஜென்டினா ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர். உலக கோப்பை கால்பந்து இறுதிப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு ரூ.342 கோடி பரிசு வழங்கப்பட உள்ளது.

## ஊடக...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

இணைந்து நடத்தும் ஊடக விருது வழங்கும் நிகழ்வின் ஒரு முக்கிய அம்சமாகவுள்ள வாழ்நாள் சாதனையளர் விருது வழங்குவதில் இரண்டாவது முறையாகவும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை குறித்து ஊடக சமூகத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்நாள் சாதனையாளர் விருது என்பது ஊடகத்துறையில் நீண்ட காலம் பங்களிப்புச் செய்த ஓய்வு பெற்ற ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படும் ஒரு நிகழ்வாகும். இந்த விருது வழங்கல் நிகழ்வில் ஆரம்பம் முதல் மூன்று சிங்களவர்களும், ஒரு தமிழரும், ஒரு முஸ்லிமும் உள்ளடங்கி ஐவர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுவது ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகின்றது.

ஆனால் கடந்த இரு வருடங்களாக தமிழ், முஸ்லிம்கள் கோட்டாவை சுருக்கி தமிழ் பேசும் சமூகத்தின் ஒருவருக்கே வழங்வதாக பத்திரிகை ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது. சிங்களவர்கள் நான்கு பேரையும், தமிழ் பேசும் சமூகத்தின் சார்பில் ஒருவரையும் தெரிவு செய்திருந்தது. இந்த தமிழ் பேசும் சமூகத்தின் ஓரிடத்துக்கு கடந்த ஆண்டு தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட போதும் அவர் அந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. இம்முறையும் தமிழ் பேசும் மக்கள் சார்பில் தமிழ் பேசும் ஊடகவியலாளர் ஒருவரே தெரிவு செய்யப்பட்டிருந்தார். இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் கூட இவ்வாறு நடந்து கொள்வது ஏன் என்ற கேள்வி இப்போது பத்திரிகை சமூகத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

பத்திரிகை ஆசிரியர் சங்க விருது வழங்கும் நிகழ்வின்போது அது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த இலங்கை பத்திரிகையாளர் ஸ்தாபனத்தின் தலைவர் வீரகேசரி நிறுவனத்தின் முகாமைத்தவ பணிப்பாளர் குமார் நடேசன், அடுத்தாண்டு விருது வழங்கும் விழாவின்போது மூத்த முஸ்லிம் ஊடகவியலாளர் ஒருவரும் உள்வாங்கப்படுவார் என தெரிவித்ததாக சமூக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாண்டுக்கான ஊடக விருது வழங்கும் விழா கல்கிசை மவுண்ட்லெவின்யா ஹோட்டலில் நடைபெற்றது. ஆனால் அநேக மூத்த முஸ்லிம் ஊடகவியலாளர்கள் பலரும் இந்த நிகழ்வை புறக்கணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களின் உரிமைகள் புறந்தள்ளப்பட முடியாது

## – அமைச்சர் ஹாபிஸ் நசீர் வலியுறுத்து!



வடக்கு,கிழக்கு மாகாணங்களை இணைத்து 13 ஐ அமுல்படுத்தக் கோரும் தமிழ் தலைமைகளும் இதே நிலைப்பாட்டிலுள்ள முஸ்லிம் தலைமையும் இணைந்த வட,கிழக்கில் முஸ்லிம்களுக்கான அதிகார பகிர்வு என்ன என்பதை தெளிவு படுத்த வேண்டுமென அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதி தலைமையில் நடாத்தப்படும் பேச்சுக்களில் (13) அரசியலமைப்பின் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கோரியதையடுத்தே, அமைச்சர் நஸீர் அஹமட் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இதில் நாங்கள் கரிசனையுடன் உள்ளோம். ஆனால், இத்தீர்வுகள் முஸ்லிம் சமூகத்துக்குப் பிரச்சினையாகிவிடக்கூடாது. வடக்கு,கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டி கோரும் தரப்புக்கள், இணைந்த வட,கிழக்கில் முஸ்லிம்களுக்கு வழங்கும் அதிகாரம் என்ன? இதுபற்றி அவர்கள் மனம் திறப்பது அவசியம். சூழ்நிலையைச் சமாளிக்கும் அறிக்கைகள் விடாமல், முஸ்லிம்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு பேசுவதே சிறந்தது.

இதே நிலைப்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை உள்ளமை ஏற்புடையதல்ல. வடக்கு கிழக்கு இணைய வேண்டுமா? அல்லது வடக்கும் கிழக்கும் வெவ்வேறாக பிரிந்திருக்க வேண்டுமா? என்பதை முஸ்லிம் காங்கிரஸ் தலைமை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும். இணைய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் ஹக்கீம் இருப்பாரேயானால்,வடக்கு ,கிழக்கு முஸ்லிம்களுக்கு வழங்கப்போகும் அரசியல் தீர்வை அவர் தெளிவுபடுத்த வேண்டும். இவ்விடயங்கள்

தொடர்பில், ஹக்கீமுக்கும், சுமந்திரனுக்கும் இதுவரை காலமும் இரகசியமாக நடாத்தப்பட்ட பேச்சுக்கள் வெளிக்கொணரப்படுவது அவசியம்.

இவ்விரு மாகாணங்களும் பிரிந்திருக்க வேண்டுமென ஹக்கீம் கூறினால்,அந்தந்த மாகாணங்களில் அபகரிக்கப்பட்ட, கையகப்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

சிறுபான்மைச் சமூகங்கள் என்ற பொது அடையாளத்துக்குள் முஸ்லிம்களையும் உள்ளீர்க்கவே முயற்சிக்கப்படுகிறது. இப்பொது அடையாளத்துக்குள்ளும் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே ,13 ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுவது கள நிலவரங்களுக்குப் பொருந்தாது. இது,அவரது தனிப்பட்ட விருப்பமே தவிர,வடக்கு,கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷை இல்லை. எனவே, தீர்வு தொடர்பில் எவரும், எழுமாந்தமாகப் பேசக்கூடாது.

வடக்கும், கிழக்கும் பிரிந்த மாகாணங்களாகவே இருப்பதானால், குறிப்பாக கிழக்கில் அபகரிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை, முஸ்லிம் பிரதேச செயலகங்களிடமோ அல்லது முஸ்லிம்களிடமோ ஒப்படைப்பது அவசியம். உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்கள் உள்ளன.அவற்றில் 04 முஸ்லிம் பிரதேச செயலங்களில் 27 வீதமாக உள்ள முஸ்லிம்களுக்கு 1.3 வீதமான காணிகளே உள்ளன. அதிகாரக் கெடுபிடிகள் மற்றும் அச்சுறுத்தல்களாலே இவர்களின்

காணிகள் அபகரிக்கப்பட்டன, கபடத்தனமாக பறிக்கப்பட்டன. மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர், அபகரிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்படுவது அவசியம். மட்டுமல்ல காணிகளின் எல்லைப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்ட பின்னரே வட,கிழக்கில் முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாகினர் கிழக்கில் காணிகள் அபகரிக்கப்பட்டன.

மட்டக்களப்பில், முஸ்லிம்களின் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டன. இதனால்தான்,13 ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இவ்விடயத்தில் கடைப்பிடிக்கும் மௌனமும் கலைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.













## அரங்கம்

# உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுமா?

**வசந்த முதலிகேயை கொலை செய்வதற்கு சதி என்கிறது**

முன்னணி சோசலிசக் கட்சி

நாடு அதன் வரலாற்றில் என்றுமே எதிர்நோக்காத பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில் 2022 ஆம் ஆண்டுக்கு பிரியாவிடை கொடுத்து 2023 ஆம் ஆண்டை வரவேற்பதற்கு தயாராகியுள்ள நிலையில், அரசியல் களம் தொடர்ந்து நெருக்கடி நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

அரகலய போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களை பழிவாங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தவண்ணமுள்ள நிலையில், கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயை தொடர்ந்து விளக்கமறியலில் வைப்பதற்கு சதி நடப்பதாக முன்னணி சோசலிச கட்சியின் செயலாளர் குமிந்த நாகமுவ குற்றம் சாட்டியுள்ளார்.

பொரளை மெகசின் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகேயை பூசா தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைப்பதற்கு அதிகாரிகள் தயாராகி வருவதாகவும், கருத்துக்கள் மஹிந்த தேசப்பிரியவின் கூற்றுடன் உறுதியாகின்றது என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

நாடு இன்றுள்ள சூழலில் தேர்தல் ஒன்று நடத்துவதை மொட்டுக் கட்சியினர் முற்றாக விரும்பவில்லை. சில தினங்களுக்கு முன் மொட்டுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள் இப்போதுள்ள சூழலில் தேர்தலை வைக்கக்கூடாது என ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்கள். ஜனாதிபதியும் நாடு இன்றுள்ள சூழலில் தேர்தல் ஒன்று வருவதை விரும்புவதில்லை என்ற கருத்துளேயே இருப்பதாகவும் அவருக்கு நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இப்போது தேர்தல் ஒன்று நடத்தினால் ஆளும் கட்சிக்கு வெற்றிவாய்ப்புக்கள் மிகக் குறைவாக இருப்பதால், ஆளும் தரப்பினர் தேர்தலை எப்படியோ ஒத்திப்போடுவதற்கு வழிகளைத் தேடி வருகின்றனர். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராக இருக்கும் போது மாகாண சபை தேர்தல் நடத்துவதை ஒத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மிக்கவராகவே இருந்தார்.

இரண்டு பிரதான விடயங்களை நிறைவேற்றுவதே அதற்குப் பிரதான காரணமாகும். கடந்த செவ்வாய்க்கிழமை உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு, அன்று மாலை இரவு சர்வகட்சி மாநாடு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. வியாழனன்று ஜனாதிபதி பதுளைக்கு விஜயம் செய்து பல அரசியல் நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

கடந்த சனியன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மாணவர்களின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டார்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடம் உருவாக்கிய முதலாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாகும். பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, தெரண உரிமையாளர் திலித் ஜயவீர, ஜனாதிபதி சட்டத்தரணி டொனால்ட் பெரேரா உட்பட பல சட்டத்தரணிகள் இதில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு கட்டடங்களது தரத்தை மேம்படுத்தவதோடு மாணவர்களின் தரத்தை மேம்படுத்துவதன் அவசியத்தை குறிப்பிட்டார். வருகை தந்த அநேகர் ஜனாதிபதியுடன் செல்பி எடுப்பதில் அக்கரை காட்டினார்கள். ஜனாதிபதி வெளியே வந்ததும் மதுர விதானேயும் அங்கு வந்திருந்தார். அப்போது அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் இப்போது சட்டபீடத்துக்கு பொறுப்பான இருப்பவர் மதுர விதானகேதான் உங்களது பிரச்சினைகளை அவர் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி சிரித்துக் கொண்டே கூறினார்.

செவ்வாயன்று இளைஞர் கொள்கைகள் வகுப்பது தொடர்பான கூட்டமொன்றுக்கு ஜனாதிபதி நாட்டின் பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அங்கு பிரதானமாக பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் மாணவர்கள் சிலரால் தாக்கப்பட்டது குறித்து பேசப்பட்டது. முன்னாள் உபவேந்தரின் மகன் போதையுடன் மோட்டார் வாகனமொன்றில் சென்றபோது ஏற்பட்ட விபத்து உச்சமடைந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அலரிமாளிகையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன உட்பட அரச தரப்பு முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்துக்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஜே.வி.பி. தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சித் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். பெப்ரவரி 04ஆம் திகதிக்கு முன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. அதிகாரப் பவரலாக்கல் பற்றி இங்கு விஷேடமாக பேசப்பட்டது.

இக்கூட்ட அறிவிப்பை மேற்கொண்ட போது தேர்தல்களை ஒத்திப்போடுவதற்கே இக்கூட்டம் கூட்டப்படுவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்திருந்த போதும், தேர்தல் தொடர்பாக எவ்வித கருத்துக்களும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை.

ஜனாதிபதி ரணில்

அவ்வாறு செய்தால் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென்றும் குமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

வசந்த முதலிகேவுக்கு எதிராக சாட்சிகளை பிறழ்ந்து கொள்வதற்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்கு முடியாதுள்ள நிலையில், இவ்வாறு அவரை பூசா சிறைச்சாலைக்கு மாற்றவுள்ளதாகவும் முன்னணி சோசலிச கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

**உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுமா?**

பிற்போடப்போடப்படுமா?

எதிர்வரும் மார்ச் மாதத்தில் பிற்போடப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும். தேர்தல் சட்டப்படி தேர்தல் ஆணைக்குழுவுக்கு இனி தேர்தலை ஒத்திப்போட முடியாது. அரசாங்கம் வேறு ஏதாவது சட்டங்களை கொண்டுவந்தால் அன்றி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டப்படி நடத்தப்படவேண்டும். இம்மாதம் கடைசியில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளூராட்சி தேர்தல் பற்றி அறிவிப்பதற்கான ஆணை கிடைக்கவுள்ளது.

கடந்த சில வாரங்களாக இத்தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்ற வாக்குவாதம் இடம்பெற்று வருகின்றன. தேர்தல் பற்றி ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களும் வெளிவந்தவண்ணமுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு முன் தற்போதுள்ள எட்டாயிரம் வட்டாரங்கள், 5200 வட்டாரங்களாக குறைக்கப்படவுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான ஐவர் கொண்ட குழு கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தொடராக கூடி வட்டாரங்களை குறைப்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது.

இந்தக் குழுவின் பதவிக்காலம் பெப்ரவரி 28 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்குள் குழு தனது இறுதி அறிக்கையை சமர்ப்பித்தாலும், அது மீளாய்வு செய்யப்படவேண்டும். அவ்வாறு மீளாய்வு செய்வதற்குக் குறைந்த பட்சம் ஆறு மாதங்கள் தேவைப்படுகின்றன. இந்த நிலையில் தேர்தல் நடத்துவதற்கு மேலும் ஆறு மாத காலத்துக்கு ஒத்திவைக்கப்படும் என்று மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த எல்லை நிர்ணய குழுவை நியமிக்கும் போது தேர்தலை ஒத்திப்போடுவதற்கு ஒரு முன்னேற்பாடு என எதிர்க்கட்சித் தரப்பில் தெரிவித்த

அக்காலத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது மொட்டுக் கட்சி அநேகமான உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றியதையடுத்து மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு ரணில் தலைமையிலான நல்லாட்சி தலைவர்கள் தயக்கம் காட்டினர். அதேநிலைமையே இப்போதும் உருவாகியிருப்பதனால் இந்த சூழ்நிலையில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கு ரணில் விரும்பமாட்டார் என்று சில அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**கால்பந்தாட்டப் போட்டிக் களிப்பில்**

கட்டாரின் தேசிய தினக் கொண்டாட்டங்கள்

கட்டார் நாடு என்றுமில்லாத அளவுக்கு உலகில் பேசப்படும் ஒரு நாடாக மாறியிருக்கிறது.

உலக கால்பந்து போட்டி கட்டாரில் நடைபெறுவதினால் முழு உலகின் கவனமும் கட்டார் பக்கம் திரும்பியுள்ளது. அரபு நாடொன்றில் இது போன்ற பிரமாண்ட போட்டியொன்று நடைபெறும் முதற் சந்தர்ப்பம் இதுவாகும். வியாழக்கிழமை கட்டாரின் தேசிய தினமாகும். உதைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியும் தேசிய தின வாரத்திலே நடத்தத் திட்டமிட்டு இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. 18 ஆம் திகதி கட்டாரின் தேசிய தினதாகும். இதனை முன்னிட்டு கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு உபசாரம் வியாழனன்று கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கைக்கான கட்டாரின் தூதுவர் தலைமையில் கட்டாரின் தேசிய தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் கலந்து கொண்டார். அமைச்சர் நஸீர் அஹமட், கட்டார் தூதுவர் மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் இணைந்து தேசிய தினத்தை முன்னிட்டு விஷேடமாக தயாரிக்கப்பட்டிருந்த கேக்கை வெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

வருகை தந்திருந்த பிரமுகர்கள் அநேகர் கால்பந்தாட்ட போட்டியை நடத்துவதற்கு கட்டார் ஆற்றிய பங்களிப்பு குறித்து தூதுவரிடம் பாராட்டுத் தெரிவித்தனர். வருகை தந்திருந்த விருந்தினர்களுக்கு உதைப்பந்தாட்டப் போட்டிக்காக தயாரிக்கப்பட்ட கால்பந்து தொப்பிகள் உட்பட பெருந்தொகையான பரிசுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாரத்தில் கடும் வேலைபளு

**நாம் தேர்தலுக்கு தயார்**

ஆனால் நல்ல மைதானமொன்று இல்லை என்கிறார் மொட்டுக் கட்சிச் செயலாளர்.

இதேநேரம் உள்ளூராட்சித் தேர்தலுக்கு தமது கட்சி தயாரென்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாம் தேர்தலுக்குத் தயார். ஆனால் அதற்கான மைதானம் இன்னும் தயாராகவில்லை என்றும் தெரிவித்துள்ளார். தேர்தல் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். தமது கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரதிநிதிகள் இதனை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அறிவித்துள்ளதாகவும் செயலாளர் காரிவசம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒன்று தயாராகியிருக்கும் நிலையில் மின்வெட்டு, எரிபொருள் பற்றாக்குறை, உணவு பற்றாக்குறை என்பன இருந்தால் மக்களுக்கு அவதானம் செலுத்தி தீர்மானமொன்றை எடுக்க முடியாதென்றும், தேர்தலுக்கு பொருத்தமான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குமாறும் ஜனாதிபதியிடம் தனது கட்சி கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தமது ஊர்களுக்கு நன்றாக வேலை செய்திருப்பதனால் தேர்தலுக்கு முகங்கொடுக்க அவர்கள் அஞ்சவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

**பாதணியை நக்குபவர்கள் இன்னும் இருக்கிறார்கள் ஹிருணிகா**

அண்மைக்காலமாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவை சர்ச்சைக்குரிய ஒருவராக ஊடகங்கள் காட்டப்படுகின்றது.

ஹிருணிகா அண்மையில் கூட்டமொன்றில் இரு பந்துகள் பற்றி பேசியது தொடர்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றில் கருத்து தெரிவித்தார்.

இது உயர்மட்டம் மற்றும் தாழ்மட்டம் தொடர்பிலான பிரச்சினை. சஜித் இக்கட்சியை நிலச்சுவந்தர்களிடம் இருந்து மீண்டும் சாதாரண மக்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். அதனால் மனவேதனை அடைந்தே இப்போது இப்படிப் பேசுகிறார்கள். கோட்டாபேயின் மிரிஹானைக்குச் சென்று பரயா என்று கூறினாலும் அது பற்றி பேச்சொன்றும் இல்லை. ரணிலின் மல் வீதிக்குச் சென்று ரணில் என்று சொன்னால் எனக்கு ஏசுகிறார்கள். நான் கொலன்னாவையின் ஒரு பெண். எனது வாய் இப்படித்தான் இருக்கும். நான் ரணிலுக்கு இப்படித்தானன் பேசுவேன். எமது கட்சியில் இன்னும் சப்பாத்துக்களை நக்குபவர்கள் இருக்கிறார்கள் என்றும் ஹிருணிகா செய்தியார் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஹிருணிகா தெரிவித்தாக கூறப்படும் கருத்துக்களுக்கு சிலர் தெரிவிக்கும் விமர்சனங்களுனுக்கு பதிலளித்தே ஒரு ஊடகவியலாளர் மாநாட்டை நடாத்தி இவ்வாறு தெரிவித்தார். நான் ஆரம்பத்திலிருந்த நிலைப்பாட்டில் இருந்தவாறே தனது நிலைப்பாட்டை ஹிருணிகா தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**மரிக்காருக்கு பதவி உயர்வு வழங்கிய சஜித்**

கொலன்னாவை ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்காரும், மத்திய கொழும்பு உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானும் வார இறுதியில் ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய வருடாந்த மகாநாட்டை வெற்றிகரமாக நடத்த முக்கிய பங்களிப்புச் செய்தவர்களாவர்.

அண்மைக் காலத்தில் கொழும்புக்கு வராத அளவு மக்கள் கூட்டம் கெம்பல் மைதானத்தில் நடைபெற்ற இந்த வருடாந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர். இந்த மகாநாட்டின் ஊடக பிரச்சாரங்கள் மரிக்காரின் பொறுப்பிலேயே இருந்தது. சமூக ஊடகத்தை சிறப்பாக பயன்படுத்தி பெருந்தொகையான மக்கள் கூட்டத்துக்கு வருவதற்கு ஏற்பாடு செய்ததில் மரிக்காரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

இந்த பங்களிப்பைச் செய்த மரிக்காரை தலைவர் சஜித் பிரேமதாச பாராட்டியதோடு நின்று விடாமல் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளர் பதவிளை வழங்கியுள்ளார்.

கட்சியின் ஊடகப் பேச்சாளர்களில் ஒருவராக இருக்கும் மரிக்கார் மற்றும் பல பதவிகளை வகித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

---

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 DECEMBER 18 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## வெஸ்டர்ன் வைத்தியசாலை மீதான குற்றச்சாட்டுக்கள் மற்றொரு சாபி நாடகமா?

உடலுறுப்புகள் மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சை மற்றும் அது தொடர்பாக நடைபெறும் வியாபாரம் தற்போது இலங்கையில் பேசுபொருளாக மாறியுள்ளதை அவதானிக்கலாம்.

கொழும்பு, பொரளையில் உள்ள வெஸ்டர்ன் தனியார் மருத்துவமனையில் சிறுநீரக மாற்று சிகிச்சை மற்றும் அது தொடர்பான மோசடிகள் இடம்பெற்று வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து குறித்த மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகளை இடைநிறுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தோடு, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு உட்பட சுகாதார அமைச்சு மற்றும் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்பன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

குற்றம் சாட்டப்பட்டுள்ள தனியார் மருத்துவமனையின் ஸ்தாபகத் தலைவர், பேராசிரியர் ரிஸ்வி ஷரீப் இலங்கையில் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை அறிமுகப்படுத்தி, அது தொடர்பான சட்டங்களை அறிமுகப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றியுள்ள ஒருவராவார்.

பேராசிரியர் ரிஸ்வி ஷரீப் கொழும்பு தேசிய மருத்துவமனையில் 1350 க்கும் அதிகமான சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகளையும் வெஸ்டர்ன் தனியார் மருத்துவமனையில் மேலும் 1300 சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகளையும் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், பேராசிரியர் ரிஸ்வி ஷரீப் தன்மீதான குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்துள்ளதோடு, சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டில் அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மை சீர்குலைந்துள்ள நிலையில், இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் மக்களைத் திசை திருப்புவதற்கான உத்தி என்றும் வைத்தியர் சாபி தொடர்பான நாடகத்தின் இரண்டாம் பாகம் என்றும் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனை மையமாக வைத்து புதருக்குள் இருந்த இனவாதிகள் முஸ்லிம் எதிர்ப்புக் கோசங்களுடன் வெளியே வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே, இவ்விடயத்தில் மக்களுக்கு நம்பகத்தன்மையான தகவல்களை வழங்கும் பொறுப்பை ஊடகங்கள் முறையாக நிறைவேற்ற வேண்டும்.

அத்தோடு, காலதாமதமின்றி விசாரணைகளை மேற்கொண்டு, உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு, சுகாதார அமைச்சு என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாம் வலியுறுத்துகிறோம்.








# லிங்கன் பல்கலைக்கழகம் மலேசியா, இலங்கையர்களுக்கு வழங்கும் வாய்ப்புகள்

ஆபிரகாம் லிங்கன் பல்கலைக்கழகங்களின் மலேசிய நிறுவனமாக விளங்கும் லிங்கன் பல்கலைக்கழகம் (LC) உலகளாவிய சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுகிறது. இப்பல்கலைகழகம் 2017 இல் மலேசியாவின் உயர்கல்வி அமைச்சகத்தால் 5 நட்சத்திர தரவரிசையைப் பெற்றது மாத்திரமன்றி ISO 9001:2015 சான்றளிக்கப்பட்ட கல்வி நிறுவனமாகவும் திகழ்கின்றது. இது தவிர, மேலும் “கொமன்வெல்த் பல்கலைக்கழகங்களின் சங்கத்தின் (ACU)” இணை உறுப்பினராகவும் உள்ளது. லண்டன், உறுப்பினர் “சர்வதேச பல்கலைக்கழகங்களின் சங்கம் (AIU)” - பாரிஸ், “உலக சுகாதார அமைப்பின் (WHO)” உறுப்பினர், என்பதோடு இலங்கையின் பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை மருத்துவ சங்கம் (SLMC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டியலின் கீழ் டுஊ பட்டியலிடப்பட்டுள்ளது. டைம்ஸ் உயர்கல்வி அவர்களின் 2021 உலக பல்கலைக்கழக தாக்க தரவரிசை மற்றும் 2023 ஆசியாவில் QS தரவரிசை 251 இல் இது 35+ இல் வைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் இளங்கலை மற்றும் முதுகலை திட்டங்களை வழங்கும் 30 நாடுகளில் செயல்படுவதோடு மட்டுமன்றி தற்போது 30000+ மேற்பட்ட இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் தங்கள் கல்வியை உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் படிக்கின்றனர். 2500+ மேற்பட்ட கல்விசார் ஊழியர்கள் உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் உள்ள கல்வி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இன்றைய நிலவரப்படி, கடந்த 2 தசாப்தங்களாக இப்பல்கலைக்கழகம் 100,000 பட்டதாரிகளையும் டிப்ளோமாதாரர்களையும் உருவாக்கியுள்ளதோடு மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம், நிதி, சமூக அறிவியல், மனிதநேயம், விருந்தோம்பல், சுற்றுலா, கட்டிடக்கலை, பில்ட் சுற்றுச்சூழல், பல் மருத்துவம் மற்றும் கணினி அறிவியல், மல்டிமீடியா ஆகிய



துறைகளில் டிப்ளோமா முதல் முதுமாணி வரையிலான தகுதிகளை வழங்க இந்த பல்கலைக்கழகம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. லிங்கன் பல்கலைக்கழகம் வழங்கும் தகுதிகள், உலகக் கல்விச் சேவைகள் (WES - கனடா), NARIC UK மற்றும் VETASSESS - அவுஸ்திரேலியா போன்ற தரப்படுத்தல் அமைப்புகளுடன் உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கக்கூடிய நவீன வகுப்பறைகள், விசாலமான சிற்றுண்டிச்சாலை பொறியியல், உயிர் விஞ்ஞானம் மற்றும் கணினி அறிவியலுக்கான ஆய்வகங்கள், உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளுடன் மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை அனுபவிக்க ஒரு பொழுதுபோக்கு அறை மற்றும் வெளிப்புற விளையாட்டு அரங்கம் போன்ற நவீன வசதிகளுடன் கொழும்பின் வர்த்தக மையத்தில் 4 ஏக்கர் பரப்பளவில் நவீன கட்டிடத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய தனியார் கல்வி நிறுவனமாகும்.

லிங்கன் பல்கலைக்கழகம் “அனைவருக்கும் கல்வி” என்ற உண்மையான எண்ணக்கருவை நம்புவதோடு இளங்கலை மற்றும் முதுகலை கல்லிக்கான பரந்த தெரிவுகளையும் வழங்குகிறது. அனைத்து கற்கைநெறிகளையும் இலங்கையிலோ அல்லது மலேசியாவிலோ குறைந்த கட்டணக் முறையில் பின்பற்றலாம். இந்த காலத்தில், மாணவர்கள் அனுமதிக்கான சிறப்பு சலுகைகள் மற்றும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து மற்றும் அமெரிக்காவிற்கு கடன் பரிமாற்ற விருப்பங்களுடன் உதவித்தொகைகளையும் அனுபவிக்க முடியும்!

2022 ஆம் ஆண்டில், இலங்கை மாணவர்கள் மலேசியாவில் ஆனு திட்டத்தைத் தொடர 50மூ நிதியுதவியைப் பெற்றனர். மற்றும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு இன்னும் சில வேலைவாய்ப்புகள் உள்ளன. மேலும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் மருத்துவ மாணவர்கள் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கான வழிகாட்டுதலையும் பல்கலைக்கழகம் வழங்குகிறது.

லிங்கன் பல்கலைக்கழகத்தில் சேரும் எந்தவொரு மாணவருக்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் தரமான கற்றல் அனுபவத்தை வழங்குகிறார்கள். மேலும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக அடிப்படை கற்கை திட்டம், க.பொ.த. சா/த பரீட்சைக்குப் பிறகு உயர்தரத்தை அடையும் இலக்கை இளைஞர்களுக்கும் விரைவான பாதையில் ஊக்கமளிக்கின்றது!

மேலும் லிங்கன் பல்கலைகழகமானது, புலமைப்பரிசில்களுடன் கலாநிதிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பல அறிஞர்களுக்கு ஆராய்ச்சியில் இறங்குவதற்கு உதவிய ஸ்ரீ லங்கா அறக்கட்டளை (SLF) போன்ற கௌரவமிக்க அரச நிறுவனங்கள் பலவற்றில் முதன்மையானது. மேலும், தனியார் மற்றும் பொது நிறுவனங்களுடனான எங்களது ஒத்துழைப்பு, ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்களுக்கு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையை குறைந்த விலையில் படிக்க உதவியுள்ளது. அரசாங்க தாதி உத்தியோகத்தர் சங்கம், இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் (PHIs) ஒன்றியம், இலங்கை அரசாங்க மருந்தாளுநர் சங்கம், இலங்கை அரசாங்க கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம், மருத்துவ ஆய்வக விஞ்ஞானக் கல்லூரி (MLT) மற்றும் சுகாதார நிபுணர்களின் கல்வியகம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்பட்டது மாத்திரமன்றி சர்வதேச தரத்திற்கு இணையாக தங்கள் தகுதிகளை மேம்படுத்த சுகாதார அமைச்சகத்துடன் இணைக்கப்பட்ட ஊழியர்களுக்கு உதவியிருக்கிறது.

இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மாலைத்தீவில் உள்ள லிங்கன் பல்கலைக்கழக நடவடிக்கைகளை வழிநடத்தும் பணிப்பாளராகிய டாக்டர் ரோஷன் டி. லிமா “ஒரு சிறப்பான கல்வியாளர் என்ற வகையில், எங்கள் அடுத்த தலைமுறைக்கு நாங்கள் வழங்கக்கூடிய முக்கிய வழிகாட்டுதல் என்னவெனில், தொழில் ரீதியாகத் தகுதியான நபர்களை ஒழுக்கமான சூழலில் உருவாக்குவதாகும்” என்கிறார். மேலும் அவர் கூறுகையில், “இந்த சிந்தனையின் வரிசையில், ஜனாதிபதி, பேராசிரியர் டாக்டர் அமியா பௌமிக் மற்றும் சார்பு அதிபர் டத்தோ டாக்டர் ஹெச்ஜே ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இலங்கையர்களாகிய எமக்கு விசேடமாக உதவுவதற்காக தொற்றுநோய் மற்றும் தொற்றுநோய்க்குப் பிற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் கல்வி மற்றும் தொழில் இலக்குகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு வழிகளைத் உருவாக்கிய, பல்கலைக்கழகத்தின் பீபி புளோரினா பின் அப்துல்லாஹ் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஆசிரிய பீடாதிபதிகள் மற்றும் செவிலியர், பல் மருத்துவம், மருத்துவம், முகாமைத்துவம் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பிரிவுகளின் துணை பீட உறுப்பினர்களால் அந்தந்த துறைகளில் நிபுணர்களால் வழிகாட்டப்படும் அதிர்ஷ்டம் பெற்ற எங்கள் மாணவர்களுக்கு அளிக்கும் மகத்தான ஆதரவிற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு டத்தோ டான் யாங் தாய் உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மாணவர்களின் தேவைகளுக்கு உடனடி பதில் அளித்ததற்காக எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

சிறந்த ஜனாதிபதியாக செயற்பட்ட ஆபிரகாம் லிங்கனின் தொலைநோக்கு பார்வையை உண்மையாக பின்பற்றுபவர்கள் என்ற வகையில், கடந்த பத்து வருடங்களாக இலங்கையில் மாத்திரமன்றி உலகின் ஏனைய பாகங்களிலும் தொழில் வல்லுநர்களாக ஆயிரக்கணக்கான மாணவர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு நாம் உதவி செய்து வருகின்றோம். எங்களுடன் பயணித்த பல மாணவர்கள் தற்போது அவுஸ்திரேலியா, கனடா, ஜப்பான், நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் குடியேறியுள்ளனர். அவர் மேலும் உறுதியளித்து, “உண்மையான இலங்கையர்களாகிய நாம் அனைவரும் மரபுரிமையாகக் கொண்டிருக்கும் கலாச்சார மற்றும் பாரம்பரிய விழுமியங்களைப் பாதுகாக்கும் அதே வேலையில், லிங்கன் பல்கலைக்கழகம் முழுமையான கல்விப் பொதியை வழங்குகிறது”.

சிறந்த கல்வி அனுபவத்தின் மூலம் உலகை வெல்வதற்கு எங்கள் மாணவர்களுக்கு வழிகளை ஏற்படுத்தி கொடுப்பதோடு மட்டுமன்றி, எதிர்காலங்களில் பல வெற்றிகளை உருவாக்க லிங்கன் பல்கலைக்கழகம் செயற்படுகின்றது.

ஒரு முழுமை பெற்ற வெற்றிகரமான கல்வி அறிவினை பெற்றுக் கொள்ள எங்கள் அதி நவீன கல்வி நிறுவனமான லிங்கன் குடும்பத்தில் இணையுங்கள்.

LINCOLN UNIVERSITY DKU016 (B)

மேலதிக விரபங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.
**டாக்டர். ரொஷன் டீ லீமா**
**தொலைபேசி : 071-79 772 771**
**மின்னஞ்சல்** - info@lincoln.edu.my
**இணையத்தளம்** - www.lincoln.edu.lk



# நாட்டில் போசாக்கு குறைபாடுள்ள 40,000 குழந்தைகளின் போசாக்கு தேவையை பெற்றோர்களால் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை!

## பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் தெரிவிப்பு



(அபு அலா)

கொவிட்-19 பெருந்தொற்றின் பின்னர் நிலையற்ற கடன், மோசமான பண இருப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றிலிருந்து எமது நாடு இன்னும் மீளவில்லை. இதன் காரணமாக எமது நாட்டில் போசாக்கு குறைபாடுள்ள சுமார் 40,000 குழந்தைகளின் போசாக்கு தேவையை பெற்றோர்களால் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் தெரிவித்தார்.

இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை இலுப்பங்குளம் கிராமத்திலுள்ள 100 சிறுவர்களுக்கு போசாக்குணவு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று மாலை (12) இலுப்பங்குள கிராம சேவகர் அலுவலகத்தில், அதன் ஒருங்கிணைப்பாளர் வி.ஆர்.விஜித்ரா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், போசாக்கு குறைபாடுள்ள சிறுவர்கள் இதுவரை 21,000 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என சுகாதார அமைச்சர் அன்மையில் தெரிவித்துள்ளார். இந்நிலைமையை இல்லாதொழிக்கவும், எமது நாட்டில் ஒரு நிலையையான இஸ்த்திரத்தன்மையை கட்டியெழுப்புவதற்கும் பல தொண்டு நிறுவனங்கள் முன்னின்று செயற்பட்டு வருகின்றது.

போசாக்குள்ள சிறார்களை எமது நாட்டில் உருவாக்கவேண்டும் என்ற நன்நோக்கில் வெளிநாட்டில் இருக்கின்ற எமது நாட்டவர்கள் எங்களைப் போன்ற தொண்டு நிறுவனங்கள் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் போசாக்கான உணவு வகைகளை வழங்கி வருகின்ற அதேவேளை கற்றல் உபகரணங்களையும், உலர் உணவுப் பொதிகளையும், பயன்தரும் மரக்கன்றுகளையும் வழங்க பல உதவிகளைச் செய்து வருகின்றனர் - என்றார்.



பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் சகோதர மொழி சிங்களப் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிய பத்திகளின் தொகுப்புகளை உள்ளடக்கிய "Beyond Common Narratives" எனும் தலைப்பிலமைந்த ஆங்கில மொழியிலான நூலின் முதற் பிரதியை இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச். சைத் அவர்களிடம் அண்மையில் (13) கையளித்தார்.

# அரசியலமைப்பு முன்மொழிவு ஆவணம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுக்கு கையளிப்பு



(எம்.என்.எம்.யஸீர் அறபாத்)

மறுசீரமைப்புக்கான மக்கள் இயக்கத்தின் அழைப்பாளர்களான சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் ஆகியோர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை திங்கட்கிழமை (12) கட்சியின் "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் சந்தித்து அரசியலமைப்பு முன்மொழிவு ஆவணமொன்றை கையளித்துக் கலந்துரையாடினர். அதற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் வேண்டிக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன் தலைமையிலான சிவில் சமூக இயக்கத்தினர் எங்களை சந்தித்து,தற்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் இருக்கிற சமன்பாட்டில் என்ன பிரச்சினைகள் இருந்தாலும், பாராளுமன்றத்தில் இருக்கிற அரசியல் தலைமைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கூட்டாக முயற்சி செய்தால் நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற மிக முக்கியமான பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றிற்கான தீர்வுகளையும் ஒரு தேர்தல் வரும்வரை காத்திருக்காமல் முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒரு முயற்சியை செய்வதற்கு இது நல்ல வாய்ப்பாக இருக்கும் என்ற அடிப்படையில் அதற்கான பொறிமுறை ஒன்றை அவர்கள் எங்களுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள்.

எனவே அந்த பொறிமுறையின் அடிப்படையில் செயல்படுவதற்கு நாங்கள் எத்தனிப்பது நல்லது என்ற அபிப்பிராயத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதனடிப்படையில் சில முயற்சிகளை செய்து பார்க்கலாம் என்றிருக்கிறோம்.

ஜனாதிபதி அடுத்த 75வது சுதந்திர தினத்திற்கு முன்பாக நாட்டின் இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை நாங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் கொண்டு வருவதற்கு தான் தயாராகவிருப்பதாக சொல்லியிருக்கிறார். அதற்கான முயற்சிகளை எவ்வாறு செய்வது என்பது சம்பந்தமாக கதைப்பதற்கான எந்த சந்தர்ப்பமாக இருந்தாலும் ,குறுகிய காலம்தான் இருக்கின்ற போதிலும் இருக்கின்ற அரசியலமைப்பின் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காவது அரசாங்கம் முன்வருமாகவிருந்தால், அதை அனைத்து கட்சிகளும் ஏற்றுக் கொண்டு அதற்கு முழு அனுசரணையும் கொடுக்குமாக இருந்தால் ஜனாதிபதியுடைய முயற்சிகளின் முக்கியமான இலக்குகளை நாங்கள் எட்டிக் கொள்ளமுடியும். இது தவிரவும் இதைவிடவும் முக்கியமான பரந்துபட்ட திருத்தங்கள் அரசியலமைப்புக்கு தேவையாக இருந்தால் அது சம்பந்தமாக இன்னும் கூடி நாங்கள் கதைத்து அதற்கு அப்பாலும் நாட்டில் இருக்கிற அரச இயந்திரங்களின் செயல்பாடுகள் சம்பந்தமான ஏனைய விடயங்களிலும் எங்களுடைய கவனத்தைச் செலுத்தலாம் - என்றார்.

# தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே உறவு மீள் நிர்மாணம் ஆதாரம் நூலும் குறுந்திரைப்படமும் வெளியீடு







1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஒன்றாக ஆவணப்படுத்தும் "ஆதாரம்" நூலின் வெளியீட்டு நிகழ்வும் இரு சமூக சகவாழ்வை முன்னிறுத்தும் "நொச்சிமுனை தர்ஹா" ஆவணப்படம் திரையிடலும் மட்டக்களப்பு சாந்தி திரையரங்க கலைக் காட்சிக் கூடத்தில் கடந்த சனியன்று (10) இடம்பெற்றது.

இலங்கையின் கிழக்கில் நிகழ்ந்த ஐந்து துன்பியல் சம்பவங்களின் மாற்று ஆவணமான இவற்றை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஐ. எம். ஜாபிர் (என் ஆத்மா) தயாரித்து வழங்கியிருந்தார்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஒரு கட்டுரையின் அடிப்படையில் அவர் எழுதி இயக்கிய "நொச்சிமுனை தர்ஹா - சகவாழ்வின் கடைசிக் கோட்டை" ஆவணத் திரைப்படமும் நிகழ்வில் திரையிடப்பட்டது.

7வது யாழ். சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடத் தெரிவான இவ் ஆவணப்படம் 11வது AGENDA 14 குறுந் திரைப்பட விழாவில் "சிறந்த ஆவணப்பட விருது" பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஆதாரம் நூலில் வீரமுனை அகதி முகாமில் தமிழ் மக்கள் மீதான படுகொலை பற்றி முன்னாள் கிராம அலுவலர் கே. பொன்னம்பலம், காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை பற்றி எம். எச்.எம். பதியுஸ்ஸமான், ஏறாவூர் பொதுமக்கள் படுகொலை பற்றி சமூக ஆய்வு ஊடகவியலாளர் ஏ.எச்.ஏ. ஹூஸைன் ஆகியோர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளும் மேலும் புதுக்குடியிருப்பு பொதுமக்கள் படுகொலை, நொச்சிமுனை தர்ஹா கந்தூரி ஆகிய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளும் இந்த ஆதாரம் என்ற ஆவண நூலில் பிரசுரமாகியுள்ளன.

இந்நிகழ்வுகள் சராசரி ஒரு நூல் வெளியீடு மற்றும் திரைப்பட நிகழ்வாகவன்றி தமிழ், முஸ்லிம் சமூகங்களின் சகவாழ்வுக்கான போராட்டத்தின் சிறு முன்னெடுப்பெனக் கருத முடியும் எனவும் கிழக்கு, வடக்கு தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே உறவை மீள் நிர்மாணிப்பதற்கான ஆவணமாகக் கொள்ள முடியும் எனவும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த சமூக நல்லுறவின் ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

சிறகு நுனி கலை ஊடக மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ் முஸ்லிம் சிங்கள சமூக நல்லுறவின் செயற்பாட்டாளர்களான பேராசிரியர்கள், ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், புத்திஜீவிகள் பலர் கலந்து கொண்டனர்.







தரம் ஐந்து இவ் வருடம் புலமைப் பாரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விஷேட கருத்தரங்கு ஒன்று அண்மையில் தெரணியகலையில் நடைபெற்றது. இப் பிரதேசத்தை சேர்ந்து 180 மாணவர்கள் பங்கு பற்றிய இவ் கருத்தரங்கில் விரிவுரையாளர் எம். எஸ். அனஸ் ஆசிரியர் அவர்கள் விரிவுரையை சிறப்பாக நடத்தினார். இப் பாடசாலையின் பழைய மாணவரான திரு கனேசன் கனேஸ்வரின் உதவியோடு,நடைபெற்ற கரு த்தரங்கில் கதிரேசன் தேசிய பாடசாலையின் அதிபர் திரு இராஜ்குமார்,கதிரேசன் ஆரம்ப பாடசாலை அதிபர் திரு சிவாகரன்,முன்னாள் அதிபர் திரு கோவிந்தசாமி,பிரதேச சபை உறுப்பினர் திரு ஜீவகுமார்,மற்றும் ஆசிரியர்கள்,பெற்றோர் என பலரும் கலந்து சிறப்பித்ததை இங்கு காணலாம்.

(அரநாயக்க விஷேட நிருபர் பாரா தாஹீர்)



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# அழகான கடன்



இஸ்லாமிய கோட்பாட்டில் “அழகான கடன்“ என்பது ஒருவர் மற்றவருக்கு தன்னலமின்றி, முற்றிலும் தூய்மையான நோக்கங்களுக்காக எதைக் கொடுத்தாலும் அது அழகான கடனை குறிக்கிறது. மனிதன் இந்த மனநிலையில் செலவு செய்வது இறைவனுக்கு கொடுக்கும் கடனாக அமைகிறது.

”குறைவடையாத செல்வங்களுக்கு சொந்தக்காரனான இறைவனுக்கு கடனா?” என்று நாம் கேட்கலாம். தேவையோடு இருக்கும் தன் அடியார்களுக்கு எவர் உதவுகிறாரோ அந்த உதவிக்காக இறைவன் அதைவிட உயர்ந்த சன்மானத்தை வழங்க ஆவலுடன் காத்திருக்கிறான் என்பதை உறுதிப்படுத்தவே இறைவன் இப்படிச் சொல்கிறான்.

கொடுப்பது எங்கள் செல்வத்தில் குறைவை ஏற்படுத்தலாம் என்று மனித மனம் நினைக்கலாம். மனித மனதின் தன்மை அப்படித்தான். அதில் பிழை இல்லை. ஆனால் இறைவனாலே எமக்கு தரப்பட்ட செல்வத்தில் இருந்து கொடுப்பதால் அந்த செல்வம் குறைவடைவதில்லை மாறாக அது நிரந்தர முதலீடாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுகிறான்.

நாம் கொடுப்பதை கடன் என்று கருதி அதை திருப்பிச் செலுத்துவதாகவும், அதை பல மடங்காக திருப்பிச் செலுத்துவதாகவும் இறைவன் உத்தரவாதம் தருகிறான். இருப்பினும், இந்த கடன் “அழகானதாக“ இருக்க வேண்டும் என்பதே இங்குள்ள நிபந்தனை.

செல்வம் பற்றிய முழுக் கருத்தும் இஸ்லாமியப் பார்வையில் இறைவனின் பரிசாக கருதப்படுகிறது. எங்களுக்கு செல்வத்தை வழங்கிய இறைவன் அதில் ஒரு பகுதியை ஏழைகளுக்காகவும் வைத்திருக்கிறான்.

எனவே எங்கள் செல்வத்தில் ஏழைகளுக்கு உரிமை உண்டு. தேவையுள்ளவர்களுக்கு கொடுத்து உதவுவது என்ற கருத்து இஸ்லாத்தில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது.

தேவையில் இருக்கும் மக்களுக்கு உதவுவதை,

ஏழை பணக்காரர்களிடையே சிறந்த உறவை ஏற்படுத்துவதை,

இறைவனால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு நல்ல செயலாக கருதி எவர் உதவுகிறாறோ அவர்

இறைவனுக்கு அழகான கடன் கொடுத்தவராக ஆகிவிடுகிறார். மறுமையில் மகத்தான கூலி இருக்கிறது என்பதற்காக அவர் அதை செய்யும் போது அது அழகான கடனாக ஆகிவிடுகிறது.

தேவைப்படுவோருக்கு கொடுப்பது நம் ஆன்மாவை தட்டி எழுப்புவதாகவும், மற்றவர்களின் நலனில் உண்மையான அக்கறையை துண்டுவதாகவும், பதட்டத்தை தனிப்பதாகவும், நேர்மறை உணர்வுகளை உருவாக்கி, மனத்திருப்தியை அதிகரிப்பதாகவும் நவீன ஆராய்ச்சி சுட்டிக்காட்டுகிறது.

ஆராய்ச்சி இப்படி சொல்லும் போது... தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக ஒருவரின் உதவிப் பொருட்கள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அவற்றை தூய்மையான மனநிலையில் தியாகம் செய்வது இறை ஆசிர்வாதம் பெறவும் ஆன்மாவையும் செல்வத்தையும் தூய்மைப்படுத்தவும் காரணமாகிறது என்று இஸ்லாமிய உளவியல் எடுத்துக் காட்டுகிறது.

நமக்கு நாமே செலவு செய்யும் போது அதற்கான பலன் அப்போதே கிடைக்கலாம். கிடைக்காமலும் இருக்கலாம். ஒருமுறை பணம் நமது பணப்பையை விட்டு சென்றால் அது திரும்ப வராது என்பது எமக்குத் தெரியும். ஆனால் அல்லாஹ்வின் பாதையில் நாம் செலவு செய்யும் அந்த செலவை கடன் என்று கணித்து அதை பல மடங்கு பெருக்கி விடுகிறான் அந்த கொடையாளன். இதைவிட நாம் எமக்காக செய்கின்ற சிறந்த முதலீடு என்னவாக இருக்கும்?

”எமது தேவைக்காகவும் பாதுகாப்புக்காகவும் உலகின் வரையறுக்கப்பட்ட வங்கிகளில் எங்கள் பணத்தை வைப்பீடு செய்தாலும் அதைவிட அல்லாஹ்வின் வரம்பற்ற வங்கியில் வைப்பீடு செய்வது மேலானது என்பதை அழகான கடன் எனும் இந்த இறை கொள்கை எமக்கு சொல்லித் தருகிறது.

நாம் வணங்கும் மனநிலையில் தூய்மையாக இருப்பது போலவே...

வழங்கும் மனநிலையிலும் தூய்மையாக இருந்ததால் எமது உடலும் உள்ளமும் உடமையும் அழகும் ஆரோக்கியமும் தூய்மையும் அடையும்.

# புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களை ஊக்குவித்து கௌரவித்தது உடுகொட அறபா















கம்பஹா உடுகொட அரபா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை ஊக்குவித்து பரிசில்கள் வழங்கிய நிகழ்வு அதிபர் எம்.ஏ.எம். அஸாம் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த புதனன்று (14) பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தரம் ஐந்து மாணவன் எம்.ஐ.எம். மிஷாரியின் கிராத் ஓதலுடன் ஆரம்பமான இந்நிகழ்வின் தலைமை உரையை அதிபர் எம்.ஏ.எம்.அஸாம் நிகழ்த்தினார்.

வகுப்பாசிரியை எம்.ஜே.ரிஹானா மாணவ மாணவிகளை வாழ்த்தி உரை நிகழ்த்தினார். வகுப்பாசிரியையின் உரையைத் தொடர்ந்து 18ஆம் திகதி புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் 40 மாணவர்களை அதிபர் எம்.ஏ.எம்.அஸாம், உப அதிபர் எம்.ஐ.அஸ்மீன், வகுப்பாசிரியை எம்.ஜே.ரிஹானா, பகுதித் தலைவி எம்.எஸ்.எப். ரிஸ்மியா ஆசிரியை,

எம்.எஸ்.எப். பஸ்னா ஆசிரியை, எம்.யூ.எப். நலீரா ஆசிரியை, ஏ. சர்மிலா ஆசிரியை, ஸாதிலா ஆசிரியை ஆகியோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இம்மாணவர்களுக்கான பரிசுப் பொதிகளுக்கான ஏற்பாடுகளை சியன மற்றும் நியூஸ் பிளஸ் ஊடகவலையமைப்பின் ஊடகவியலாளரும், தரம் ஐந்து மாணவன் ஸாஹித் ஸமீரின் தாயாருமான ஹிமாயா ஹமீட் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பரிசளிப்பு விழாவின் இறுதியாக மாணவன் ஸாஹித் ஸமீர் நன்றியுரை நிகழ்த்தினார். தரம் ஐந்து மாணவிகள் ஒருசிலரின் ஸலவாத்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுபெற்றது.

# இனப்பிரச்சினை தீர்வு குறித்து விரைவான தீர்மானம் அவசியம்

## சர்வகட்சி மாநாட்டில் ரவூப் ஹக்கீம்!



எதிர்வரும் 75ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்திற்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் (13) நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பொது இணக்கப்பாட்டை எட்டும் நோக்கில் ஜனாதிபதி இம்மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்,

75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னதாக, குறைந்தபட்சம் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக, 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

அதன் பிறகு, அனைத்துக் கட்சி மாநாடு மற்றும், தேவைப்பட்டால், சிவில் அமைப்புகளும் பங்கேற்று அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கு செல்லலாம். விக்டர் ஐவன் போன்ற சிவில் சமூக ஆர்வலர்கள் ஏற்கனவே எம்மை சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். அந்த மாகாணங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்கான பிரதான பிரச்சினை அவர்களின் காணிகள் வேறு சிலரால் கையகப்படுத்தப்பட்டமையாகும். இராணுவம் மட்டுமன்றி ஏனைய அரச நிறுவனங்களும் காணிகளை கையகப்படுத்தியுள்ளன. குறிப்பாக வனஜீவராசிகள், வனப் பாதுகாப்பு மற்றும் தொல்பொருள் திணைக்களம் இவ்வாறு காணிகளை கையகப்படுத்தியுள்ளது.

இது முஸ்லிம் சமூகத்திற்கு மட்டுமல்ல, சிங்கள சமூகத்திற்கும் ஒரு பிரச்சினை ஆகும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில், சில மத ஸ்தலங்களின் சொத்துக்களை அரசாங்கம் கையகப்படுத்த முயற்சித்தது. சில இடங்களில் பொலிஸார் தங்கியுள்ளனர்.

இவ்விடயத்தில் மக்களுக்குப் பிரச்சினை உள்ளது. எனவே இது சஹ்ரான் அல்லது அவரது குழுவினருக்கு சொந்தமான சொத்துக்கள் அல்ல, அவை ஏனைய மத ஸ்தானங்களுக்கு சொந்தமானவை.

இதற்கு பதில் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எந்த மத ஸ்தலமும் அச்சுறுத்தலுக்கு உள்ளானால் எங்களுக்குத் தெரிவிக்கவும். தற்போது சில முஸ்லிம் அமைப்புகளை ஆய்வு செய்து வருகிறோம். சில அமைப்புகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

தேசிய நல்லிணக்கம் மூலம் இனப்பிரச்சினக்கு தீர்வு காண்பது தொடர்பில் சர்வகட்சி மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தமைக்காக ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு தமது பாராட்டுகளை தெரிவித்தனர்.

# ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் - ரிஷாட் சந்திப்பு!



ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கருக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பு (13) இலங்கைக்கான ஐ.நா தூதரகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் அவற்றிலிருந்து மீண்டெழுவதற்கான வழிவகைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப் பட்டதுடன், சர்வதேச முகவராண்மைகளின் ஆதரவுடன் முன்னோக்கி செல்லும் முறைமைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதேவேளை, ஐ.நா வதிவிடப் பிரதிநிதி இலங்கைக்கு ஆற்றிய அளப்பரிய பணிகளுக்கு நன்றியினை தெரிவித்த ரிஷாட் எம்.பி, தனது சேவைக்காலத்தை நிறைவு செய்யவுள்ள ஐ.நா வதிவிடப் பிரதிநிதிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

# ஸாஹிரா நூற்றாண்டு நடை பவணி





(எம்.எஸ். அமீர் ஹுசைன்)

மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையின் ஸாஹிரா நடைபவணி கடந்த 11 ஆம் திகதி ஞாயிரன்று வெற்றிகரமாக நடைபெற்றது. ஸாஹிரா கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் இறுதியை குறிக்கும் வகையில் இந்த நடை பவணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உட்பட பாடசாலை செயற்பாட்டு செயலணி குழு. பழைய மாணவியர் சங்கம், வருடாவருடம் வெளியேறிய மாணவ அணிகள், கல்லூரியின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் தொடர்ச்சியாக ஒத்துழைத்து வரும் நலன் விரும்பிகள் உட்பட பலதரப்பட்டவர்களும் இணைந்து இந்த நடை பவணியை ஏற்பாடு செய்திருதனர்.

கடந்த ஒரு வருடமாக நடைபெற்று வந்த நூற்றாண்டு விழா கொண்டாட் டங்களின் நிறைவாக இந்த நடை பவணி “வோக்” ஏற்பாடு செய்யப் பட்டதோடு இலங்கையின் முதலாவது மிக நீளமான பாடசாலைக் கொடியை மாணவர்கள் தாங்கி நடைபவணியில் பங்கெடுத்தமை சிறப்பம்சமாகும்.

ஏற்கனவே பாடசாலை நடை பவணியொன்றில் தாங்கிச் செல்லப்பட்டுள்ள பாடசாலைக் கொடியின் நீளம் (700 அடி) 200 மீட்டர்களாக இருந்ததோடு ஸாஹிரா நடை பவணியில் தாங்கிச் செல்லப்பட்ட கொடியின் நீளம் (875 அடி) 250 மீட்டர்களாகும்.

நடை பவணி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி ஸாஹிரா வீதி, ஹசன் மாவத்தை, ஹெம்மாதகம வீதி ஊடாக மாவனல்லை நகரை கடந்து ரம்புக்கனை வீதி, மஹவத்தை தக்கியா வீதி, மாராவை வீதி ஊடாக சுமார் 04 கிலோமிட்டர் தூர பயணத்தின் பின்னர் ஸாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தை அடைந்ததோடு நிறைவடைந்தது.

அத்துடன் ஹெம்மாதகம வீதியில் கிருங்கதெனிய பதுரியா மத்திய கல்லூரி சந்தியில் இந்த நடையில் பங்குபற்றிய ஸாஹிரா கல்லூரி அதிபர் ஏ.எம். நௌசாத், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை கௌரவிக்கும் வகையில் பதுரியா கல்லூரியின் அதிபர் ஏ.எல். அப்துர் ரஹ்மான் தலைமையில் ஆசிரியர்கள், பழையமாவணவர் சங்கம் மற்றும் பழைய மாணவியர் சங்கம் உள்ளிட்ட குழுவினரால் வரவேற்பளிக்கப் பட்டதோடு நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவ மளிக்கப்பட்டது. அத்துடன் மாவனல்லை யுனைடட் விளையாட்டுக் கழகமும் இந்த நடை பவணியில் பங்கு பற்றியவர்களுக்கு வரவேற்பு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

சுமார் 10.000 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த நூற்றாண்டுநடைபவணியில் கலந்துகொண்டதோடு பாடசாலையில் இயங்கிவரும் ஒவ்வொரு இணைப் பாடவிதானசெயற்பாட்டுடன் சம்பந்தப்பட்டபிரிவுகளின் அலங்கார ஊர்திகளும் கலந்துகொண்டமை நடைபவணிக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைந்திருந்தது.

# அட்டாளைச்சேனையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

## பொது மக்களின் ஒத்துழைப்பினைக் கோருகின்றது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் ரிபாஸ் அவர்களின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் டெங்கு ஒழிப்பு ஒருங்கிணைப்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய் தடுப்பு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த கூட்டத்தில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம். இஸ்மாயில், அட்டாளைச்சேனை பெரிய ஜு/ம்மாபள்ளிவாயல் தலைவர் சட்டத்தரணி எஸ். எம். ஜு/னைதீன், ஏனைய மத நிறுவனங்களின் தலைவர்கள், பிரதேச சபை செயலாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் சிவில் சமூக பிரதிநிதிகளும் சங்கங்களின் சார்பான பிரதிநிதிகளும் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் சனிக்கிழமை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் டெங்கு அதிகமாக பரவக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற பிரதேசங்களில் பாரிய சிரமதான நடவடிக்கைகளும் கள பரிசோதனையும் இடம்பெற இருப்பதனால் சகலரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பணிப்பாளர் பொதுமக்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். குறித்த நிகழ்வு அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# தொழிலதிபர் ஏ.டபிள்யூ.எம் நாஜிமுக்கு “ஹித்தவாதி கீர்த்தி ஸ்ரீ தேசமான்ய” விருது



மடவளை பஸாரை சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் தொழிலதிபருமான ஏ.டபிள்யூ.எம் நாஜிம் அகில இலங்கை சமூக கலாசார சுற்றுப்புற சூழல் அமைப்பினால் “ஹித்தவாதி கீர்த்தி ஸ்ரீ தேசமான்ய’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அகில இலங்கை ரீதியாக பல்துறை சார்ந்த பணிகளில் ஆளுமை மிக்க முன்னோடிபணியாளர்களுக்கு வடக்கு கிழக்கு அடங்கலாக நாடு முழுவதிலிருந்தும் மேற்படி விருதுக்கு 20 நபர்கள்தேர்வு செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நபருக்குள் ஒருவரான இவர், மடவளை ஜூம்ஆ மஸ்ஜித், வர்த்தக சங்கம் போன்ற பல்வேறு சமூக நல அமைப்புகளில் தலைமைத்துவம் வகித்துவருவதுடன் தேசிய மட்டத்தில் இயங்குகின்ற பல்வேறு அமைப்புகளின் பிரதியாகவும் இணைந்து செயலாற்றி வருகிறார். மேற்படி விருது வழங்கும் வைபவம் அகில இலங்கை சமூக கலாச்சார சுற்றுப்புறசூழல் அமைப்பின் தலைவர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தலைமையில் கொழும்புபண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (20)நடைபெற்றது. மேலும் நைட் பதவி பெற்ற கலாநிதி, தேசமானி ஏசியா பசிபிக் நைட்கொமாண்டர் சேர். க்லெரல்ஸ் குமாரகே பிரதம அதிதி யாகவும் மற்றும் பல்துறை சார்ந்தமுக்கியஸ்தர்கள் பலரும் அதிதிகளாக கலந்துகொண்டனர்.



சுஜப் எம்.காசிம்

# கால அவகாசத்துக்காக காத்திருக்கும் பட்ஜட்!

அரசாங்கத்தின் ஆட்டம் ஆட்டங்காணவில்லை என்பதை நிரூபித்துள்ளது பட்ஜட்டின் வெற்றி. இரண்டாம் வாசிப்பில் கிடைத்த ஆதரவை விடவும் மூன்றாம் வாசிப்பில் இரண்டு வாக்குகள் அதிகரித்துள்ளன. ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும், ஜனாதிபதியை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனக் கூறிக் கிளம்பிய குரல்களுக்கு இந்த வெற்றி பல படிப்பினைகளைச் சொல்கிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒழுங்கமைப்புக்கள் இன்னும் சளைக்கவில்லை என்பதே அது. இதிலிருந்து வெளியேறிய டளஸ் அணி, விமல் வீரவன்ஸ அணி இன்னும் அநுர பிரியதர்சன யாப்பா அணிகளும் மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் இனிப் பொறுமை காப்பதுதான் புத்திசாதுர்யம்.

மக்களின் நலன்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள், அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள்ள வகுக்கப்பட்ட அரசாங்கத்தின் திட்டங்களுக்கு எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பதுதான் மக்களை நேசிக்கும் அரசியலுக்கு அழகு. இந்த ஒத்துழைப்புக்கள் இன்னுமொரு தேர்தல் வரைக்கும் நிலைப்பது அவசியம். அப்போதுதான் மீள எழும் நமது முயற்சிகளின் பலாபலன்களைக் கண்டுகொள்ள முடியும். இக்காலங்களை அரசாங்கத்தின் செயற்றிறனை அளவிடுவதற்கான ஒரு தகுதிகாண் காலமாகவும் கருதிச் செயற்பட எதிரணிகள் முன்வருவதே சிறப்பானது.

இதைவிடுத்து ஆர்ப்பாட்டங்கள், அமர்க்களங்கள் மற்றும் எதிர்ப்புக்கள் என நாட்டைச் சீரழிக்கும் செயற்பாடுகளை முடுக்கிவிடுவது பொறுப்புள்ள கட்சிகளுக்குப் பொருந்தாது. ஏனெனில், இந்த பட்ஜட்டுக்கு எதிராக வாக்களித்த கட்சிகள் கடந்த காலங்களில் முக்கிய பதவிகள், பொறுப்புக்களில் இருந்ததை மக்கள் மறக்கவில்லை. வெறுமனே ஆட்சி, அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்காக ஆர்ப்பாட்டங்கள் நடாத்துகிறார்களா? அல்லது மக்களின் இன்னல்களைப் போக்க எதிர்ப்பு பேரணிகளை ஏற்பாடு செய்கிறார்களா? என்பதையெல்லாம் அறிந்துகொள்ளும் அளவுக்கு அரசியலில் நன்கு தேறிய சூழலில்தான் மக்கள் உள்ளனர்.

இதை எதிர்த்த கட்சிகள் ஏன் எதிர்த்தன? குறிப்பாக, சிறுபான்மை தலைமைகளிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி இது. தற்போது ஜனாதிபதியாக உள்ளவரின் தலைமையில் நல்லாட்சியை நிறுவிய கட்சிகள்தான் அதிகம் எதிர்த்திருக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்தியுங்கூட, அந்த நல்லாட்சியில் தற்போதைய ஜனாதிபதியை பிரதமராக ஏற்றிருந்த காலங்கள் மறக்கப்பட முடியாதவை.

"பிள்ளை நல்லவன், ஆனால், வளரும் தாயே கூடாதவள்" என்ற தர்மத்தின் அடிப்படையிலே இந்த அரசாங்கத்தை எதிர்ப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவித்திருந்தார். அவ்வாறானால், ஜனாதிபதியின் அழைப்பையேற்று தேசிய அரசாங்கத்துக்கு இணங்கி இந்த நல்ல பிள்ளைக்கு (ஜனாதிபதி) சந்தர்ப்பம் வழங்கியிருக்கலாம். இன்றைய சூழல் விவாதத்துக்கு உகந்ததல்ல. இதனால், யதார்த்தத்தை மட்டும் பேசப் புறப்படுவோம்.

வெளிநாட்டுக் கற்கைகளுக்காக நமது மாணவர்கள் செல்வது, நாட்டு அந்நியச் செலாவணியின் அரைப்பங்கை வெளிப்பாய்ச்சுகிறது. இதைத் தடுப்பதற்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழக கிளைகளை நிறுவ ஜனாதிபதி முன்வந்துள்ளார். சிங்கப்பூர், மலேஷியா மற்றும் பிரித்தானியாவின் கல்வி முறைமைகள் இங்கு அறிமுகமாகவுள்ளன. இதனால், திறமையுள்ள ஏழை மாணவர்களுக்கும் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

மலையக மக்களின் இருநூறு வருட வாழ்வை மேம்படுத்த அரசாங்கம் முயற்சிகள் எடுக்கவுள்ளது. உற்பத்திகளை அதிகரித்து, இறக்குமதிகளை மட்டுப்படுத்த வேண்டிய தேவையில் நாட்டின் பொருளாதாரம் உள்ளது. எனவே, ஒரு காணித் துண்டையாவது வழங்கி மலையகத்தில் மரக்கறிச் செய்கையில் புரட்சியை உண்டாக்க முயற்சிக்கப்படவுள்ளன. மாணவர்கள் உள்ளடங்கலாக சகல தரத்தாரையும் வீழ்த்தும் போதைப் பாவனை, விற்பனைகளை பூண்டோடு கிள்ளியெறிய படையினர் களமிறங்க உள்ளனர்.

இதுபோன்ற நல்ல பல திட்டங்களின் பெட்டகமாகவே இந்த பட்ஜட் உள்ளது. இதை நடைமுறைப்படுத்த, நாடு சீராகச் செல்வதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இந்த வாய்ப்புக்கள் பற்றி இந்தத் தகுதிகாண் காலத்திலாவது எதிர்க்கட்சிகள் சிந்திக்கட்டும். அதாவது, தேர்தலொன்று வரும் வரைக்காவது இந்த வாய்ப்புக்களுக்கு குறுக்காக எந்தக் கட்சிகளும் நிற்கக்கூடாது. வந்த வாய்ப்புக்கள் அனைத்திலும் முயன்று முடியாமல் போயுள்ள இன்றைய நிலையில், மக்களுக்காகவும் நாட்டின் எதிர்காலத்துக்காகவும் பணியாற்றுவது சகல மக்கள் பிரதிநிதிகளுக்கும் பொறுப்பாக்கப்படுகிறது.

மிகப் பிரதானமாக வெளிநாடுகளின் உதவிகள், தயவுகளில்தான் நமது மீண்டெழுகை தங்கியுள்ளது என்பதை எல்லோரும் உணர்வதில்தான் இந்த பட்ஜட் இலக்குகளின் வெற்றி தங்கியுள்ளது.

ஒவ்வொரு அங்குலமாக மூழ்கிக்கொண்டிருந்த நமது பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், சீரழிந்த நிலையில் சென்று கொண்டிருந்த அரசியலை சீர்படுத்தவும் விடுக்கப்பட்ட அழைப்புக்கு மதிப்பளித்து, நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதிக்கு நாம் வழங்கும் மரியாதையாகவே இது பார்க்கப்படும்.

***



# ஜாமியா நளிமியா பள்ளிவாசலைக் கொண்ட 50 ருபா முத்திரையும் வெளியீட்டு









(அஷ்ரப் ஏ சமத்)

முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களத்தினால் தபால் திணைக்களம் இணைந்து சீனங்கோட்டை ஜாமிய நளீமியா முகப்புக் கொண்ட முதல் நாள் உறை, மற்றும் ஜாமியா நளிமியா பள்ளிவாசலைக் கொண்ட 50 ருபா முத்திரையும் வெளியீட்டு வைபவம் (14) தபால் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார் தலைமையில் நடைபெற்றது.

முதல் நாள் உரையை தபால் திணைக்களத்தின் ஊடாக ஊடகம் தபால் தொலைத்தொடர்பு இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார வெளிநாட்டு விவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றியிடம் கையளித்தார்.

அத்துடன் அமைச்சர் நசீர் அஹமட், இராஜங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் முசாரப், உட்பட ஜாமியா நளிமியா பீடத்தின் பணிப்பாளர் அகார் முஹம்மட், நளீம் ஹாஜியாரின் புதல்வர் ஹலீம் நளிம், பௌத்தசாசன அமைச்சின் செயலாளர், உட்பட முஸ்லிம் பிரமுகர்கள் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர்.

களுத்துறை மாவட்டத்தின் பேருவளை பிரதேசத்தில் சீனங்கோட்டை எனும் இடத்தில் அமைந்துள்ள ஜாமிஆ நளிமியா நிறுவன வளாகத்தினுள் ஜாமிஆ நளிமியா மஸ்ஜித் அமைந்து காணப்பட்டது. இது கொடை வள்ளலுமான மர்ஹூம் அல்ஹாஜ் எம். ஐ.எம். நளீம் அவர்களினால் 1978 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு முஸ்லிம் சமுகத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

# சர்வதேச நீர் மாநாடு 2022 ஆரம்பம்





(பி.எம். முக்தார்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் ஏற்பாட்டில் நடைபெறும் சர்வதேச நீர் மாநாடு 2022 நேற்று 14ஆம் திகதி புதன்கிழமை சுகாதார மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது, இரத்மலானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர் மற்றும் துப்பரவேற்பாட்டு சிறப்பு மையம் அமைச்சரினால் திறந்துவைக்கப்பட்டது. அத்துடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குடிநீர் போத்தலும் இதன்போது அறிமுகப்படுத்திவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, அமைச்சின் செயலாளர் மொன்டி ரணதுங்க, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்க, பிரதி தலைவர் சஞ்சீவ விஜேதுங்க, பொது முகாமையாளர் திலின விஜேதுங்க உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

நேற்று 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச நீர் மாநாடு எதிர்வரும் 16ஆம் திகதிவரை நீர் மற்றும் துப்பரவேற்பாட்டு சிறப்பு மையத்தில் நடைபெறும்.

# நானுஓயா பொலிஸாரால் மரம் நடுகை!

(செ.திவாகரன்)



சூழலை பாதுகாக்க முன்னெடுக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக தொடர்ந்து நானுஓயா பொலிசாரினால் மரங்களை நடுகை செய்யும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இதன்படி நானுஓயா பொலிஸாரால் ,நுஃஎபற்ஸ்போட் தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் இணைத்து கடந்த வாரம் நானுஓயா பிரதான வீதி ஓரமாகவும் ,பாடசாலையை சுற்றியும் மரம் நாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

நானுஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுகத் வீஜிசுந்தர தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நானுஓயா பொலிஸ் நிலைய பொலிசாரும் , பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், என பலரும் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# கட்டார் நாட்டின் தேசிய தினம்






**(அஷ்ரப் ஏ சமத்)**

கட்டார் நாட்டின் தேசிய தினம் புதன் கிழமை 14.டிசம்பர் 2022 ஆம் திகதி கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் இலங்கைக்கான தூதுவர் ஜெஸ்மின் பின் ஜபீர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் கலந்து கொண்டார். அத்துடன் நினைவுதின கேக்கினை அதிதிகளாகக் கலந்து கொண்டா சபாநாயகர், மகிந்த யாப்பா அபேரத்தின, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச, அமைச்சர் டக்லஸ் தேவநாந்தா, வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி விலையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பிணாகள் வெளிநாட்டுத் துவர்களும் கலந்து சிறப்பித்தனர் இரு நாடுகளது தேசிய கீதங்கள் ஒலிக்கப்பட்டன.

அத்துடன் கட்டார் நாட்டில் நடைபெறுகின்ற உலக கால்பந்தாட்டப் போட்டிக்கான டீ.சேட் கைப்பைகளும் பரிசாக அதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# 342கோடியை தமதாக்கி கொள்ளப்போவது யார்?

## உலகக்கிண்ன்ண கால்பந்தாட்டத்தின் சூடு பிடித்திருக்கும் இறுதிப்போட்டி



**அப்ரித் வஸீர்**

உலகமெங்கும் பேசு பொருளாகி இருக்கக்கூடிய கத்தார் உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டிகள் இன்றைய தினம் (18) லுசைல் மைதானத்தில் இலங்கை நேரப்படி இரவு 8.30 மணிக்கு வெகு கோலாகலமாக நடைபெறவிருக்கிறது. இன்றைய இறுதிப்போட்டி ஆர்ஜெண்டீனா மற்றும் பிரான்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெறவிருக்கிறது.

இந்த இரு அணிகளும் இது வரையில் தலா 2 முறை வெற்றிக்கிண்ணத்தை பெற்றுள்ளது. அது மட்டுமன்றி கடைசியாக நடைபெற்ற உலகக்கிண்ண போட்டியில் பிரான்ஸ் அணி உலகக்கோப்பையை தமதக்கிக்கொண்டதும் இங்கு சிறப்பம்சமாகவுள்ளது.

எனவே யார் கிண்ணத்தை வெல்வார் என்ற குழப்பம் இரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

கத்தார் கால்பந்தாட்டம் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. கால்பந்தாட்டப் போட்டிகள் கடந்த மாதம் 20-ம் திகதி கத்தாரில் தொடங்கியது. இதில் 32 நாடுகள் பங்கேற்றின.அதில் 8 பிரிவுகள் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம்பெற்றன. லீக் சுற்றுகள் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் நாக்-அவுட் ரவுண்டான 2-வது சுற்றுக்கு நுழைந்தன. இதில் நெதர்லாந்து , செனகல் (குரூப் ஏ), இங்கிலாந்து, அமெரிக்கா (பி), அர்ஜென்டினா, போலந்து (சி), பிரான்ஸ், ஆஸ்திரேலியா (டி), ஜப்பான், ஸ்பெயின், (இ), மொராக்கோ , குரோஷியா (எப்) , பிரேசில், சுவிட்சர்லாந்து (ஜி), போர்துக்கல், தென் கொரியா (எச்) ஆகிய 16 நாடுகள் 2-வது சுற்றுக்கு தகுதி பெற்றன.

இந் நிலையில், நாக் அவுட் சுற்றுகள் 6ம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தன. நாக் அவுட் சுற்றில் வென்றதன் மூலம் நெதர்லாந்து, அர்ஜென்டினா, பிரான்ஸ், இங்கிலாந்து, குரோசியா, பிரேசில், மொராக்கோ, போர்ச்சுக்கல் ஆகிய அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன.

அர்ஜென்டினா, பிரான்ஸ், குரோசியா, பிரேசில், மொராக்கோ, போர்ச்சுக்கல் ஆகிய அணிகள் அரையிறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெற்றன.இதில் நடப்புச் செம்பியனான பிரேசில் வெளியேறின.அர்ஜென்டினா, பிரேசில், பிரான்ஸ் ஆகிய அணிகள் கால்இறுதிக்கு வந்து விட்டாலும், தங்களது லீக்கில் தலா ஒரு அதிர்ச்சி தோல்விகளை சந்தித்திருந்தன. முன்னாள் சாம்பியன்களான ஜெர்மனி, உருகுவே லீக் சுற்றுடன் நடையை கட்டின.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அரையிறுதிப் போட்டிகளாக மொரோக்கோ மற்றும் பிரான்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

மொரோக்கோவை 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தி மொரோக்கோவின் சம்பியன் கனவை முடிவுக்குக் கொண்டுவந்து நடப்புச் சம்பியன் பிரான்ஸ் உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

கட்டாரின் அல் பைத் அரங்கில் இலங்கை நேரப்படி வியாழக்கிழமை (15) அதிகாலை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியின் ஐந்தாவது நிமிடத்திலேயே தியோ ஹெர்னான்டஸ் கோல் பெற்றது பிரான்ஸை வலுப்பெறச் செய்தது.

மொரோக்கோ கோல்கம்பத்திற்கு அருகில் தள்ளுமுள்ளு ஏற்பட தன்னிடம் வந்த பந்தை ஹெர்னாண்டஸ் கோலாக மாற்றினார். இதன்மூலம் உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் 1958க்குப் பின்னர் வேகமாக கோல் பெற்றவராக ஹெர்னாண்டஸ் பதிவானார்.மறுபுறம் இம்முறை உலகக் கிண்ணத்தில் மொரோக்கோ எதிரணிக்கு விட்டுக்கொடுத்த முதல் கோலாகவும் இது அமைந்தது.மொரோக்கோ அணித்த தலைவர் ரொமன் சைஸ் 20 ஆவது நிமிடத்தில் உபாதை காரணமாக வெளியேறியது மற்றும் கடைசி நிமிடத்தில் நயேப் அகுவார்ட் மாற்றப்பட்டது அந்த அணிக்கு பின்னடைவாக இருந்தது.என்னும் முதல் பாதியின் கடைசி நிமிடங்களில் மொரோக்கோ அணி பிரான்ஸின் கோல் பகுதியை அடிக்கடி ஆக்கிரமித்து பதில் கோல் திருப்ப கடுமையாகப் போராடியது. குறிப்பாக ஜாவத் எல் யாமின் பிரான்ஸ் பெனால்டி எல்லை பகுதியில் உதைத்த பைசிகள் கிக் கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது.

இரண்டாவது பாதியிலும் பதில் கோல் திருப்பும் மொரோக்கோவின் அவசரம் தெரிந்தது. ஹகிம் செயச் மற்றும் சொபியான் பவுபல் இடம் பந்து கிடைக்கும் தருணங்களில் பிரான்ஸ் பெனால்டி பகுதியை அபாயகரமான முறையில் ஆக்கிரமித்தனர்.76ஆவது நிமிடத்தின்போது அப்தர்ரசாக் ஹம்தல்லா பிரான்சின் வலையை நோக்கி பல தடவைக் உதைத்தபோதும் ஒன்று கூட கோலாக மாறவில்லை.

எனினும் பிரான்ஸ் மொரோக்கொவின் எதிர்பார்ப்பை 79ஆவது நிமிடத்தில் முழுமையாக சிதறடித்தது. மொரோக்கோ பொனல்டி பகுதிக்குள் ம்பப்பே கடத்தி வந்த பந்தை கோலோ முவானி கோலாக மாற்றினார்.

ஒஸ்மான் ட்ம்பெலேவுக்கு பதில் மைதானம் வந்து வெறுமனே 44 விநாடிகளிலேயே அவர் அந்த கோலை பதிவு செய்தார். இது உலகக் கிண்ண வரலாற்றில் பதில் வீரராக வந்து பெறப்பட்ட இரண்டாவது வேகமான கோலாக இருந்தது.

இரண்டு கோல்களால் பின்தங்கியபோதும் கடைசி நிமிடங்களிலும் மொரோக்கோ வெற்றிக்காக போராடியதை காண முடிந்தது.இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணி 1978 மற்றும் 1986இன் உலக சம்பியனான லியோனல் மெஸ்ஸியின் ஆர்ஜன்டீனாவை எதிர்கொள்ளவுள்ளது.

1962இல் பிரேசிலுக்குப் பின்னர் உலகக் கிண்ணத்தை தொடர்ச்சியாக வெல்லும் எதிர்பார்ப்புடனேயே பிரான்ஸ் இறுதிப் போட்டியில் களமிறங்கவுள்ளது.



2021 ஆம் ஆண்டுக்கான அதிசிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் இணையாசிரியர் மர்லின் மரிக்காருக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து வருடா வருடம் நடாத்திவரும் அதி சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் வைபவத்தின் இவ்வருட நிகழ்வின் போது இவர் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.



விஸ்டம் பிளவர் அகாடமியின் சித்திரக் கண்காட்சியில் பஸ்லான் பாருக் மன்றத்தின் தலைவரும் .ஐ ம சக்தியின் முஸ்லிம் விவகாரச் செயலாளருமான பஸ்லான் பாருக் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.



ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் பதவிக்கான நியமனக்கடித்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ (16) கையளித்தார்.

கட்சியின் ஊடகப் பேச்சாளாராகவும், உதவி செயலாளராகவும் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.